Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

2.4.2026
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**2026 ஆம் ஆண்டில் பினாங்கு நீர் திட்டங்களுக்காக PBAPP, ரிம631 மில்லியன் நிதி ஒதுக்கீடு.**

- **இது நிறுவன வரலாற்றிலேயே மிக அதிகமான மூலதனச் செலவின (CAPEX) ஒதுக்கீடாகும்: 2025 ஆம் ஆண்டில் ரிம363 மில்லியனாக இருந்த நிலையில், 2026 ஆம் ஆண்டிற்கு ரிம631 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.**

- **முக்கிய திட்டங்கள்: புதிய 114 MLD மெங்குவாங் பூங்கா நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP),புதிய 136 MLD சுங்கை பிறை (Sungai Perai) WTP திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் 1,342 MLD சுங்கை டுவா WTP மேலதிக விரிவாக்கம்.**

- **நிதி ஆதாரம்: 2025 ஆம் ஆண்டின் இலாபம் மற்றும் ரிம5 பில்லியன் மதிப்பிலான சுகூக் (Sukuk) திட்டம்.**

பினாங்கு, வியாழக்கிழமை, 2.4.2026:
PBAPP, 2026 ஆம் ஆண்டில் நீர் விநியோகத் திட்டங்களுக்காக மூலதனச் செலவினமாக (CAPEX) ரிம631 மில்லியன் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இந்த வருடாந்திர மூலதனச் செலவின நிதி ஒதுக்கீடு, பினாங்கின் நீர் விநியோக வரலாற்றிலேயே இதுவரை இல்லாத மிகப்பெரியதாகும்.

2026 ஆம் ஆண்டில் அதிகபட்ச மூலதனச் செலவின ஒதுக்கீடுகளைக் கொண்ட முதல் 5 திட்டங்கள் பின்வருமாறு:

1. **ஒரு நாளைக்கு 114 மில்லியன் லிட்டர் (MLD) கொள்ளளவு கொண்ட மெங்குவாங் பூங்கா நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP) மற்றும் அதனுடன் இணைந்த குழாய் அமைப்புகள்**: மத்திய செபராங் பிறையில் (SPT) அமைக்கப்படுகின்றன. இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம், 2030 ஆம் ஆண்டுக்கான நீர் அவசரகாலத் திட்டத்தின் (WCP 2030) 3-வது அங்கமாகும், மற்றும் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது செயல்பாட்டுக்கு வந்தவுடன், 86,400 மில்லியன் லிட்டர் (ML) கொள்ளளவு கொண்ட விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை (EMD), முன்பு "வறட்சி காலத்திற்கான ஒரு முக்கிய சேமிப்பு அணை" என்ற நிலைமை இருந்து "இரட்டைப் பயன்பாட்டு அணையாக" செயல்படும்.

மெங்குவாங் பூங்கா WTP, மத்திய செபராங் பிறைக்கு நீர் விநியோகிப்பதற்காக, தினசரி அடிப்படையில் அணையிலிருந்து நீரை எடுத்து, சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்திச் செய்யும். அதோடு, சுங்கை டுவா ஆற்றில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் காரணமாக, அவசரகாலப் பயன்பாட்டிற்கு போதுமான நீர் எப்போதும் கிடைக்க உறுதி செய்ய, PBAPP விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையின் (EMD) நீர் இருப்பைக் கவனமாக நிர்வகிக்கும்.

2. **136 MLD சுங்கை பிறை நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான நிலம் கையகப்படுத்துதல்:** இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம், WCP 2030 திட்டத்தின் மற்றொரு அங்கமான சுங்கை பிறை நீர் விநியோக திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

3. **வடக்கு செபராங் பிறையில் (SPU) 1,342 MLD சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் விரிவாக்கத் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல்:** சுங்கை டுவா கால்வாயின் முடிவில் இரண்டாவது சமநிலைப்படுத்தும் குளம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (WTR) கழிவு மறுசுழற்சி தொகுதியில் மேம்படுத்தல், கூடுதல் தெளிந்த நீர் தொட்டி அதிக சுத்திகரிக்கப்பட்ட நீரை சேமிப்பதற்கான உயர்த்தப்பட்ட நீர் கோபுரம்.

4. **1,800 மி.மீ மெக்கல்லம் முதல் புக்கிட் டும்பார் வரையிலான பிரத்யேக சுத்திகரிக்கப்பட்ட நீர் குழாய்க்கான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் குழாய் பணிகள்:** இந்த கூடுதல் 3.2 கி.மீ குழாய், 3வது பினாங்கு இரட்டை நீர்மூழ்கிக் குழாய்கள் (3வது PTSP) இறங்கு தளத்திலிருந்து பினாங்கு தீவில் உள்ள புக்கிட் டும்பார் நீர்த்தேக்கம் மற்றும் நீரேற்று நிலைய வளாகத்திற்கு அதிக சுத்திகரிக்கப்பட்ட நீரை கொண்டு செல்லும். இந்த WCP 2030 திட்டமானது பிரதான நிலப்பரப்பிலிருந்து தீவிற்கு அதிக நீரை விநியோகிக்க உறுதி செய்வதாகும்.

5. **வடக்கு செபராங் பிறையில் உள்ள 114 MLD சுங்கை மூடா நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான நிலம் கையகப்படுத்துதல்:** சுங்கை

மூடா நீர் சுத்திகரிப்பு நிலையம், WCP 2030 திட்டத்தின் ஒரு பகுதியாகும். SPU-வில் அதிக நீரை சுத்திகரிப்பதற்காக மற்றும் விநியோகம் செய்வதே இதன் நோக்கம். இத்திட்டம் 2029-ஆம் ஆண்டில் நிறைவடைய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த 5 முக்கிய நீர் விநியோக உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த மூலதனச் செலவு சுமார் ரிம387 மில்லியன் ஆகும். இது 2026 ஆம் ஆண்டிற்கான PBAPP-இன் மொத்த மூலதனச் செலவு திட்டத்தில் 61.3%-ஐ குறிக்கிறது.

இந்த மூலதனச் செலவு (CAPEX) வரவுசெலவுத் திட்டத்தின் மீதமுள்ள 39%-இல் பின்வரும்வரையிலான பணிகள் இடம்பெறுகின்றன:
பல்வேறு குழாய் பதித்தல் அல்லது மாற்றும் திட்டங்கள்
மீட்டர் மாற்றும் திட்டங்கள் (மேம்படுத்தப்பட்ட வருவாய் சாரா நீர் (NRW) மேலாண்மைக்கு ஆதரவளிப்பதற்காக)
நீர் சுத்திகரிப்பு நிலையங்களை (WTP) மேம்படுத்தும் திட்டங்கள்
புக்கிட் பெனாரா மற்றும் புக்கிட் டும்பார் ஆகிய இடங்களில் புதிய நீர்த்தேக்கங்களைக் கட்டுதல்

**2026 CAPEX நிதி ஒதுக்கீடு**

PBAPP-இன் பொதுப் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட ஹோல்டிங்ஸ் நிறுவனமான PBA ஹோல்டிங்ஸ் பெர்ஹாட் (PBAHB), கடந்த 31.12.2025 தேதியிட்ட இடைக்கால நிதி அறிக்கையில், 2025 நிதியாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத வரிக்குப் பிந்தைய இலாபமாக (PAT) சுமார் ரிம115 மில்லியனைப் பதிவு செய்துள்ளது.

PBAHB பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டின் நிகர லாபத்தில் சுமார் ரிம100 மில்லியன், 2026 ஆம் ஆண்டிற்கான PBAPP-இன் மூலதனச் செலவின முதலீடுகளாக நேரடியாக மீண்டும் பயன்படுத்தப்படும்.

PBAPP ரிம5 பில்லியன் சுகூக் திட்டத்தின் கீழ் இஸ்லாமிய நடுத்தர கால பத்திரங்களை (IMTN) வெளியிடுவதன் மூலம், 2026 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவு (CAPEX) வரவு செலவில் மீதமுள்ள ரிம531 மில்லியனுக்கு நிதியளிக்கத் திட்டமிட்டுள்ளது.

PBAPP-இன் 2026 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு ஒதுக்கீடும் நிதிக் கட்டமைப்பும் பின்வரும் அம்சங்களை பிரதிபலிக்கின்றன:

- பினாங்கில் நீர் பற்றாக்குறை ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. PBAPP, பினாங்கு மற்றும் அதன் மக்களின் நலனுக்காக 2030 ஆம் ஆண்டு வரை போதுமான நீர் விநியோகத்தை உறுதிசெய்ய, முக்கியமான நீர் விநியோகத் திட்டங்களை குறிப்பாக WCP 2030 திட்டங்களை செயல்படுத்துவதில் உறுதியாக உள்ளது.

- தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான ISO 9001:2015 உறுதிப்பாட்டிற்கு இணங்க, PBAPP பினாங்கில் நீர் விநியோக சேவைகளை தொடர்ந்து மேம்படுத்தும்.

- பினாங்கில் நீர் மற்றும் நீர் விநியோக சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் PBAPP ஆண்டுதோறும் ஈட்டும் இலாபம், அங்குள்ள மக்கள் மற்றும் வணிகங்களின் நலனுக்காக, நீர் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்தும் மூலதனச் செலவாக (CAPEX) பெருமளவில் மீண்டும் முதலீடு செய்யப்படுகிறது.

- மேலும், பினாங்கில் உள்ள முக்கியமான, காலக்கெடு சார்ந்த மற்றும் நீடித்த நீர் விநியோக திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்காக, PBAPP ரிம5 பில்லியன் மதிப்பிலான சுகுக் திட்டத்தை திறம்பட பயன்படுத்தும்.

- பினாங்கை "தேசிய ரீதியில் பிரமிக்கும் குடும்பத்தை மையமாகக் கொண்ட பசுமை மற்றும் விவேக மாநிலத்தை உருவாக்குதல்" எனும் மாநில அரசின் "பினாங்கு 2030" தொலைநோக்குப் பார்வைக்கு ஆதரவாக PBAPP செயல்பட்டு வருகிறது.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section
மின்னஞ்சல் : syarifah@pba.com.my



114 juta liter sehari LRA Taman Mengkuang dijadualkan siap menjelang akhir tahun 2026.
The 114 million litres per day Mengkuang Park WTP is scheduled for completion by the end of 2026.
© PBAPP 2026



1,342 juta liter sehari Loji Rawatan Air Sungai Dua | 1,342 million liters per day Sungai Dua Water Treatment Plant.

© PBAPP 2026